**தலைப்பு 410 - நிறுவனத்தின் தோட்ட சீர்திருத்தங்கள், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் தொடர்பான பயிர்ச்செய்கை மற்றும் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிறுவனத்தின் தோட்ட சீர்திருத்தங்கள், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் தொடர்பான பயிர்ச்செய்கை மற்றும் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் தோட்ட சீர்திருத்தங்கள், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் தொடர்பான பயிர்ச்செய்கை மற்றும் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தின் தோட்ட சீர்திருத்தங்கள், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் தொடர்பான பயிர்ச்செய்கை மற்றும் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக்

காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிறுவனத்தின் தோட்ட சீர்திருத்தங்கள், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் தொடர்பான பயிர்ச்செய்கை மற்றும் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு 2020 ஒக்தோபர் 06 ஆந் திகதிய 2196/27 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 2020 ஒக்தோபர் 06 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டமையினால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவை இல்லாதிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

**ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றின் (SA 82) பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்களின் ஆரம்ப மிகுதி ரூபா 6,431,852 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், நிதிக் | திறைசேரி அச்சீட்டுக் குறிப்பின் SA 82 நிதியல்லாச் சொத்துக்களின் ஆரம்ப மீதியாக ரூபா 6,431,852 காட்டப்பட்டது. அது | நிதிக் கூற்றில் SA 82 இன் பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்களின் ஆரம்ப மிகுதி மற்றும் நிதிக்கூற்றுக்களின் நிதியல்லாச் சொத்துக்கள் |

| | | |
|---|---|---|
| கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ – 6) ஆரம்ப மீதியொன்று காட்டப்படவில்லை. இவ் வேறுபாட்டிற்குக் காரணம் இனங்காணப்பட்டு அது நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களின் நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ - 6) 2(1) இல் கொள்வனவு செய்யப்பட்டவையாகக் காட்டப்பட்டுள்ளது. | தொடர்பான கூற்றில் (ஏசீஏ – 6) நிதியல்லாச் சொத்துககளின் ஆரம்ப மிகுதிக்கும் இடையிலான வேறுபாடு சரிசெய்யப்படல் வேண்டும். |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 891(i) இல் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உள்ளடங்கியதாக பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பேணப்படவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பான நடவடிக்கை எடுப்பதற்காகக் குறித்துக்கொள்ளப்பட்டது. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 14 செலவு விடயங்களுக்கான ஒதுக்கத் தொகையில் ரூபா 516,150,956 ஆன தொகையொன்று அதாவது நூற்றுக்கு 7 வீதத்திலிருந்து நூற்றுக்கு 81 வீதத்திற்கு இடையிலான வீச்சில் சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. | 2020 ஆம் வருடத்தில் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக நாட்டில் களத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் சிக்கல்கள் காணப்பட்டமையால் இந்த ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. | திட்டமிடப்பட்ட ஒதுக்கங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மூலதன மற்றும் மீண்டெழும் செலவு விடயங்கள் 04 இற்கான ஒதுக்கங்கள் ரூபா 880,000 முற்றாகச் சேமிக்கப்பட்டிருந்தன. | அமைச்சிற்காக போதியளவு அலுவலக இட வசதியொன்று இல்லாமை, கடமை நடவடிக்கைகளுக்குத் தேவையான அலுவலக உபகரணங்கள், கணணி மற்றும் துணைப்பாகங்களின் தேவைப்பாடு இல்லாமை போன்ற காரணங்களினால் இச் செலவுகள் மேற்கொள்ளப்படுவதற்கு தேவையேற்படவில்லை என்பதால் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டன. | ஒவ்வொரு செலவு விடயங்களுக்காகவும் தேவையான நிதி மதிப்பீடுகள் முடிந்தளவில் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (குறிப்பு – iii) காட்டப்படாத ரூபா 28,421 ஆன பொறுப்புக்கள் 2021 ஆம் வருடத்தில் சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் தீர்க்கப்பட்டிருந்தன. | 2020 ஆம் வருடத்திற்கான இலங்கை டெலிகொம் பீஎல்சீ நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த பற்றுச்சீட்டுக்கள் தாமதமாகக் கிடைத்தமையால் இக் கொடுப்பனவுகள் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று தயாரிக்கும் போது மீளாய்வாண்டிற்கான அனைத்துப் பொறுப்புக்களும் அதில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய சான்றுபடுத்தல்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் எற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாடுகளுக்கான சக்தி வாய்ந்த உள்ளகக் | அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை பூரணப்படுத்தப்படாமையால் காணப்படுகின்ற மனிதவளங்களை உச்சளவில் பயன்படுத்தி | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டுப் பராமரிக்கப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியுள்ளதுடன் அம் முறைமையின் பயனுறுதி தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை பயனுறுதியாகப் பராமரிக்கப்படுவதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அந்த மீளாய்வொன்று எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கவில்லை. | அமைச்சின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் மாதாந்தம் நடைபெறுகின்ற நிறைவேற்று அதிகாரிகளின் கூட்டங்களில் உள்ளகக் கட்டுப்பாடொன்று பராமரிக்கப்படல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டு பொருத்தமான வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டுச் செயன்முறை பராமரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உம்மால் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் எதிர்காலத்தில் நிதிக் கட்டுப்பாடு தொடர்பான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கையிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளை முறையாகச் செயற்படுத்துவதற்காக பயனுள்ள முறைகள் காணப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியுள்ள போதிலும் அத் தேவைப்பாட்டின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3 நல்லாளுகை

### 3.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அமைச்சினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்படவில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்படுவதற்கான நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 91 பேரில் உள்ளபடியான பதவியணி 47 பேர் என்பதுடன் வெற்றிடங்களின் எண்ணிக்கை 44 ஆகக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. கணக்காய்வுத் தினம் வரையில் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வெற்றிடங்கள் காணப்பட்ட பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரச சேவைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. | தேவையான பதவிகளுக்காக குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |